**தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 ஜூலை 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, இவ் அறிக்கையில் காட்டப்பட்டுள்ள தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) மீண்டுவரும் செலவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டு நவம்பர் மாதம் தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சுக்காக மாவட்ட செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,770,808 இற்கான மின்சாரச் செலவு மீளாய்வாண்டின் போது மீளளிப்பு செய்திருந்ததுடன், அந்த தொகையினை அரச வருமானத்திற்கு செலவு வைக்காமல் குறிப்பிட்ட செலவு விடயத்திற்கு மிகை விதிப்பு செய்திருந்தமையால் மீளாய்வாண்டின் மின்சாரச் செலவு அதே தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | அறிக்கையிடும் காலப் பகுதி தொடர்பாக செலவுகள் சரியாக நிதிக் கூற்றுக்களில் பிரதிபலிக்க கூடிய வகையில் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இரத்மலானை பிரதேச செயலகத்தினால் இயந்திரங்களை சேவை செய்தல் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் செலவு குறிப்பிட்ட செலவு விடயத்திற்கு கணக்கீடு செய்யாமல், வேறு செலவு விடயங்களுக்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் அந்த செலவு விடயம் ரூபா 130,315 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | வருட இறுதியில் சரி செய்வதற்கான நாட்குறிப்பு பதிவு செய்தல் தவறுதலாக மேற்கொள்ள முடியாமல் போனது என மற்றும் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்காக எதிர்காலத்தில் பொறுப்பாக இருக்கப்படும் என. | சரியான செலவு விடயத்தில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 14 சேவை இல்லங்கள் / கிராம உத்தியோகத்தர் அலுவலக கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்திருக்காமையால் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காத கட்டிடங்களை இனங்கண்டு விரைவாக பெறுமதி மதிப்பீட்டு அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத கட்டிடங்களை இனங்கண்டு விரைவாக பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் உட்படுத்த வேண்டும். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச உத்தியோகத்தர்களுக்காக முற்பண ‘பீ’ கணக்கில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதி கொழும்பு மாவட்ட அலுவலக ஏடுகளின் படி ரூபா 189,449,639 தொகை மற்றும் திறைச்சேரி ஏடுகளின் படி ரூபா 190,606,233 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,150,694 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது. | இது தொடர்பாக 2023.07.28 திகதி நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரையுடனான அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு சமர்ப்பித்து ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்கள ஏடுகளின் படி வித்தியாசத்திற்குரிய இணக்கஞ் செய்யப்படாத மீதியை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 2023 ஜூலை 06 திகதிய தேசிய அடையாள அட்டைகளுக்கான கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த கடிதத்தில் விடய இலக்கம் 2 இல் 1 இன் படி அறவிடப்படும் கட்டணம் நாளாந்தம் அல்லது குறுகிய காலத்தினுள் (உச்ச அளவு ஒரு வார காலம்) பிரதேச செயலகத்தின் சிராப்பர் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இரண்டு பிரதேச செயலகங்களின் 07 பிரிவுகள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களினால் சேகரிக்கப்பட்ட அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்காக கட்டணம், மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு இனங்காமல் தாமதமாக சமர்ப்பிக்கபட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | அனைத்து வாரங்களிலும் அலுவலத்திற்கு வரும் சந்தர்ப்பத்தில் பணத்தை தீர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | சேகரிக்கப்பட்ட வருமானம் ஏற்பாடுகளுக்கு இணங்க வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய தேறிய ஏற்பாடுகள் ரூபா 1,666 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், தேறிய செலவுகள் ரூபா 1,447 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகள் ரூபா 219 மில்லியன் எனப்படும் 13 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. கடந்த ஆண்டுக்கு நேரொப்பாக ஏற்பாடுகள் பயன்பாட்டுத் தன்மை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், இந்தச் சதவீதத்தை இதைவிட குறைத்துக்கொள்வதற்காக மாதாந்த மற்றும் காலாண்டு ரீதியாக முன்னேற்றம் கலந்துரையாடப்படுகின்றது என. | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க மதிப்பீடுகள் முடிந்த அளவு முழுமையாக மற்றும் சரியாக தயாரித்தலும் ஏற்பாடுகளை செயற்திறனுடன் பயன்படுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண பீ கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் ரூபா 393,780 தொகையும், வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த 10 உத்தியோகத்தர்களிடம் ரூபா 790,498 தொகையும், சேவையை விட்டுச் சென்றிருந்த 05 உத்தியோகத்தர்களிடம் ரூபா 532,954 தொகையுமாக 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 01 வருடம் முதல் 25 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற கூட்டுத்தொகை ரூபா 1,717,232 இற்கான கடன் மீதியொன்றை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தரின் கடன் மீதி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், மீதியான 08 மீதிகளை அறவீடு செய்வதற்காக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும், சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களின் 02 கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது எனவும், மேலும், 02 கடன் மீதிகள் பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்படுகின்றது எனவும். | கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 வைப்புக் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு 02 பொது வைப்புக் கணக்குகள் தொடரபாக தீர்க்கப்பட்டிருக்காத கூட்டுத்தொகை ரூபா 250,200,701 இற்கான வைப்பு மீதியொன்று காணப்பட்டதுடன், அந்த மீதியில் கூட்டுத்தொகை ரூபா 94,530,828 இற்கான 05 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களும் காணப்பட்டது. இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 ஏற்பாடுகளுக்கு இணங்க முறைப்பிரகாரம் நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட தரப்பினருக்கு வைப்புத் தொகையை செலுத்துதல் அல்லது அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்ந்தும் நி.பி. 571(3) ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த சந்தர்ப்பங்களும் பொது வைப்புக் கணக்கில் காணக்கூடியதாக உள்ளது எனவும், இது தொடர்பாக கணக்காளரின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | காலவதியாகிய வைப்பு மீதிகளை விரைவாக தீர்ப்பதற்கு அல்லது நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| (ஆ) 06 பிரதேச செயலகங்கள் தொடர்பாக ஊனமுற்றோர் கொடுப்பனவு ரூபா 539,462 தொகை, முதியோர் கொடுப்பனவு ரூபா 2,108,069 தொகை, நோய் உதவிக் கொடுப்பனவு ரூபா 45,000 தொகை மற்றும் எக்பிரஸ் பேல் கப்பல் நட்டஈட்டுக் கொடுப்பனவு ரூபா 977,325 தொகை ஆக குறிப்பிட்ட நலன் பெறுவோர்களினால் பெற்றுக்கொண்டிருக்காத கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 3,669,856 தொகை திருப்ப பிரதேச செயலகங்களுக்கு அனுப்பப்பட்டதுடன், முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு அந்தத் தொகைக்கான நலன்பெறுவோரை இனங்கண்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது செலவு விடயத்திற்கு மிகை விதிப்பு மேற்கொள்ளப்படாமல் பொது வைப்புக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | நலன் பெறுவோருக்கு செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக சரியான நலன் பெறுவோரை இனங்கண்டு அவர்களுக்கு உரித்தான கொடுப்பனவுகளை குறிப்பிட்ட காலப் பகுதியில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பன்முகப்படுத்தப்பட்ட மூலதன பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆண்டு தொடர்பாக 04 பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்படாத, பாதியளவில் செயற்படுத்தப்பட்ட மற்றும் இரத்துச் செய்யப்பட்ட 53 செயற்திட்டங்களில் 39 இற்காக பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுவதற்கு முன்னர் அதற்குரிய உறுதிச் சீட்டுக்கள் மற்றும் காசோலைகள் தயாரிக்கப்பட்டு ரூபா 1,674,120 இற்கான செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிறுவனங்களினால் பண்டங்கள் வழங்கியிருக்கப்படாமையால் அந்தத் தொகை மீளாய்வாண்டின் அரச வருமானத்திற்கு செலவு | கணக்காய்வு அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட உறுதிச் சீட்டுக்கள் தயாரித்திருத்தல் மற்றும் காசோலைகள் தயாரித்திருத்தல், தவறொன்றென ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், 2021 ஆண்டில் நிலவிய கொவிட் பேரழிவுடன் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி நிலைமையினால் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல், வழங்கல்கள் பற்றாக்குறையின் காரணமாக காசோலைகள் வழங்கப்படாமல் | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களுக்குரிய சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்படுத்தப்பட வேண்டியதுடன், பண்டங்கள் கிடைப்பதற்கு முன்னர் உறுதிச் சீட்டுக்கள் தயாரித்தல், காசோலைகள் எழுதுதல் தொடர்பாக முறையான விசாரணையொன்று நடாத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் மேற்கொள்ளப்படாத நிலைமையொன்று ஏற்பட்டிருந்த போதிலும் நலன் பெறுவோருக்கு பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நோக்கத்துடன், காசோலைகள் எழுத்தப்பட்ட போதிலும் அதற்குரிய வழங்குதல்கள் நிறைவேற்ற முடியாமல் போனதால் செயற்திட்டங்களுக்கு உரிய எழுதப்பட்ட காசோலைகளை இரத்துச் செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 02/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தி மற்றும் வழிகாட்டல் இலக்கம் 12 இன் அறிவுரைகளுக்கு இணங்காத வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருந்ததுடன், பிரதேச செயலகங்களின் பதவியணியினர் விபரங்கள் உட்படுத்தப்பட்டிருக்காமை. தொழிற்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு பொறுப்புத் துறைகள் மற்றும் அதற்குரிய தொழிற்பாடுகள் மற்றும் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு மற்றும் பெறுபேறுகள் சரியாக இனங்காணல் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | பிரதேச செயலங்களின் பதவியணி விபரங்கள் உட்படுத்தப்படவில்லை எனவும், மற்றும் தொழிற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவுகளில் நாளாந்த அலுவல்கள் விரிவாக காட்டப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், 2024 ஆண்டு அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டலுக்கு இணங்க வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காணப்பட்ட 03 உயிர் வாயு அலகுகள் தீர்மானித்தல், சமூர்த்தி பெறுவோர் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்காக 26 கழிவறைகள் நிர்மாணித்தல், திறன் தொழில் கலைஞர்கள் தகவல்கள் அடங்கிய இணையத் தளமொன்று தயாரித்தல் மற்றும் 45 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் கண்காணிப்பு ஆகிய தொழிற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட அமைச்சுக்களினால் ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் இந்த செயற்திட்டங்கள் செயற்படுத்துவற்கு முடியாமல் போனது என. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பண்முகப்படுத்தப்பட்ட மூலதன பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2022 ஆண்டு தொடர்பாக 12 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 17,343,502 இற்கான 78 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் கணக்கீட்டு காலாண்டு அட்டவணையில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்ததுடன், அந்த ஆண்டில் ஆரம்ப காலாண்டில் மாத்திரங்கள் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டதெனவும், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக பண்டங்களின் நிலை அதிகரித்தல், வழங்குனர்களினால் வழங்குதல்களை நிறைவேற்றி முடிவுற்றிருந்த போதிலும் அதற்குரிய காசோலைகள் வழங்கப்படாமையால் அந்த வழங்கப்பட்ட பண்டங்களை திருப்பி எடுத்துச் செல்லல், வழங்குனர்களினால் கூறுவிலைகள் சமர்ப்பித்திருக்காமை, ஒப்பந்தக்காரர்களினால் செயற்திட்டங்கள் ஆரம்பித்தலை நிராகரித்தல் போலவே சுற்றறிக்கை மூலம் செலவுகளை வரையறுத்தல், புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தலை இடைநிறுத்துவதற்காக ஆலோசனை வழங்கப்படல் ஆகிய காரணங்களினால் | திட்டமிட்டவாறு செயற்திட்டங்களுக்கு உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்படுத்த வேண்டும். |

செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது என.

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (outcome) அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடுவல பிரதேச செயலகத்தினால் 03 சேவை இல்லங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 5,228,434 தொகையும், சீதாவக பிரதேச செயலகத்தினால் 05 சேவை இல்லங்கள் நிர்மானிப்பதற்காக ரூபா 5,309,169 தொகை மற்றும் ஹோமாகம பிரதேச செயலகத்தினால் 04 சேவை இல்லங்கள் நிர்மானிப்பதற்காக ரூபா 4,075,194 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது. மேலும், சீதாவக பிரதேச செயலகத்தினால் சேர்ந்த ரூபா 2,165,807 இற்கான செலவிடல் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சேவை இல்லமொன்று பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | நிர்மாண வேலைகளின் முதல் கட்டம், தொடர்பாக முழுமையான திட்டத்தில் பகுதியொன்று ஏற்பாடுகளின் வரையறைக்குள் நிறைவேற்றுதல் 2022 ஆண்டில் நடைபெற்றது. இது முதற் காலாண்டில் நிறைவேற்றப்பட்டதுடன், அந்த ஆண்டிலேயே மீதியான காலாண்டுகளின் போது மீதியான வேலைகளை பூர்த்தி செய்யும் கருமத்துடன் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் 2022 ஆண்டில் 2,3,4 காலாண்டுகளின் போது செயற்திட்டத்தின் மீதியான அலுவல்களை மேற்கொள்வதற்கு முடியாமல் போனது. இந்த செயற்திட்டங்கள் தொடர்பாக மீதியான வேலைகளை நிறைவேற்றுவதற்காக 2024 ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் பணம் ஒதுக்க முடியாமல் போனதுடன், கடுவல பிரதேச செயலகத்தின் இரண்டு செயற்திட்டங்கள் மீதியான அபிவிருத்தி அலுவல்கள் கடுவல மாநகர சபையின் பொது நிதியிலிருந்து நிறைவேற்றுவதற்காக இணக்கம் ஏற்பட்டுள்ளது.<br>வெலிகித பல்கரும கட்டிடத்தின் முதலாவது மாடியின் சேவை இல்லத்தற்குரிய பகுதியை அபிவிருத்தி செய்தல் தரை மாடி வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தரை மாடியில் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் கடமை அலுவல்களின் அலுவலக | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்கியிருக்காமை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவற்றை பயன்படுத்துவதற்கு வேலைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | விடயங்கள் தற்போது பேணிச் நடாத்தப்பட்டு வருவதுடன் அந்தக் கட்டிடத்தின் மீதியான அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யும் வரை மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | |
| (ஆ) | 2022 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சௌபாக்கிய உற்பத்திக் கிராமச் செயற்திட்டத்தின் கீழ் 04 பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்பட்டிருந்த உற்பத்திக் கிராமங்களின் கூட்டுத்தொகை ரூபா 836,970 இற்கான உபகரணங்கள் மற்றும் நலன்களை பெற்றுக்கொண்ட 09 நலன் பெறுவோர் அந்தச் செயற்திட்ட அலுவல்களிலிருந்து விலகியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. இந்த உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக மின்சார தேவைப்பாடு ஆரம்ப உட்கட்டமைப்பு வசதி என காணப்பட வேண்டியிருந்த போதிலும் நாட்டில் நிலவிய தொடர்ச்சியான மின் வெட்டு காரணமாக கைத்தொழில்களை நடாத்திச் செல்வதற்காக தடைகள் ஏற்பட்டிருந்தமையால் அந்த நலன் பெறுவோர் வேறு தொழில்களுக்கு திருப்பப்பட்டிருந்தனர் என. | விலகியிருந்த நலன் பெறுவோருக்கு வழங்கியிருந்த உபகரணங்களை இனங்கண்டு ஆர்வமுடைய வேறு தரப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டியிருந்ததுடன், தொடர் நடவடிக்கை அலுவல்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 03 நிரந்தர சேதனப் பசளை விற்பனை நிலையங்கள் ஆரம்பித்தல், 20 உற்பத்தி முயற்சியாளர்களை உருவாக்குதல் மற்றும் சேதனப் பசளை பயன்பாட்டை மேம்படுத்தும் குறிக்கோளுடன் கடுவல பிரதேச செயலகத்தினால் சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொரதொட சேதனப் பசளை உற்பத்திக் கிராமம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன்கீழ் ரூபா 488,480 இற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்ட 13 நலன் பெறுவோர் செயற்திட்டத்திலிருந்து விலகியிருத்தல், ரூபா 975,000 தொகை செலவிடப்பட்டு உற்பத்திச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த 05 சேடர் இயந்திரங்கள் செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படாமல் வீட்டுத் தோட்டத்திற்கு தேவைகளுக்கான | 2021 ஆண்டின் போது அரசினால் இரசாயன உரம் பயன்படுத்தலை வரையறுத்தல் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கான முக்கிய காரணமாக இருந்தது. அதன் பின்னர் அரசினால் இரசாயன உர பயன்பாடு தொடர்பாக வரையறை விதித்த போதிலும், அதற்கான எதிர்ப்புகள் விவசாய அமைப்புக்களில் இருந்து உருவாகியிருந்தது. அதனால் சேதனப் பசளை உற்பத்திக் கிராமும் வீழ்ச்சியடைவதற்கு நேரிட்டது. அதன் காரணமாக சேதனப் பசளை உற்பத்திக் கிராமம் தொடர்பான நலன் பெறுவோர் என செயலாற்றிய பதின்மூன்று பேர் சேதனப் பசளை உற்பத்தியிலிருந்து விலகி வேறு தொழில்களில் ஈடுபடும் போக்கொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும், சேதனப் பசளை உற்பத்தியில் | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்கியிருக்காமை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவற்றை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரம் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட காரணத்தினால் செயற்திட்டத்தின் குறிக்கோள் எதிர்பார்த்த விளைவுகளை அடைந்திருக்கவில்லை. | ஈடுபடும் நபர்களை தொடர்ந்தும் கட்டறிவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தற்போது பயன்படுத்தப்படாத உபகரணங்களை முறைப் பிரகாரம் அவர்களுக்கு வழங்குவதன் மூலம் கடுவல பிரிவு அடங்கக் கூடிய விதமாக சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விற்பனைக் கிராமம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என. | |
| (ஈ) | இரண்டு சேதனப் பசளை மற்றும் பால் உற்பத்திக் கிராமங்கள் தொடர்பாக சேதனப் பசளை விற்பனை செய்வதற்காக கடுவெல நகர சபைக்குச் சொந்தமான காணியொன்றில் மண்டபமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 2,926,829 தொகைக்கான பால் உற்பத்திகளை விற்பனை செய்தல் உட்பட சங்கத்தின் மேம்பாட்டு அலுவல்களுக்காக கடுவல நகர சபைக்குச் சொந்தமான காணியொன்றில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்றின் தரை மாடியின் வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ரூபா 2,926,829 தொகையுமாக கடுவல பிதேச செயலகத்தினால் கூட்டுத்தொகை ரூபா 5,853,658 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், அந்தச் செயற்திட்டம் தோல்வியடைந்திருந்தமையால் மீளாய்வாண்டு இறுதியல் உள்ளவாறு இந்த இரண்டு கட்டிடங்களும் உத்தேச குறிக்கோள்களுக்காக பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | கட்டிடம் நிர்மாணிப்பதற்கான குறிக்கோளாகிய சேதனப் பசளை உற்பத்தி அப்போது நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின்மீது மற்றும் எதிர்ப்புக்களின் காரணமாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன், பால் உற்பத்தி மற்றும் விற்பனை செய்தல் மேம்பாட்டு அலுவல்களும் வீழ்சியடைந்த காரணத்தினால் நலன் பெறுவோர் வேறு தொழில்களில் ஈடுபட்டனர். எனினும், இரண்டு உற்பத்திக் கிராமங்கள் தொடர்பாக ஒரு பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தவற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு கட்டிடங்களும் சௌபாக்கிய உற்பத்திக் கிராம சங்சங்களின் குழுக் கூட்டங்கள் கூடுதல் மற்றும் பொதுக் கூட்டம் கூடுதல் மற்றும் பிரிவுப் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அலுவலக விடயங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றதென, மீதியான விடயங்களை பூர்த்தி செய்தல் தொடர்பாக கடுவல மாநகர சபையின் பொது நிதியில் இருந்து பயன்படுத்துவதற்கும் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், | செயற்திட்டத்தின் மூலம் எதிர்ப்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்கியிருக்காமை தொடர்பாக கண்டறிந்து அந்த செயற்திட்டங்களை செயற்படு நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சௌபாக்கிய உற்பத்தி நிகழ்சசித் திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக தேவையான தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என. | |

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹோமாகம பிரதேச செயலகத்திற்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு 2017 ஜனவரி மாதத்தின் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த காரணத்தினால் 2018 ஜூலை மாதத்தில் ஒப்பந்தக்காரருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையை இரத்துச் செய்து 2021 ஏப்ரல் மாதத்தில் புதிய ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், 2024 மே 31 திகதி அளவில் நிர்மாண வேலைகளுக்காக ரூபா 271,786,566 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலகத்தின் அலுவல்களுக்காக பயன்படுத்தக்கூடியவாறு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலைகளுக்காக 2018, 2019, 2020 மற்றும் 2023 ஆண்டுகளின் போது ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகையில் முறையே ரூபா 180 மில்லியன், 188, 57.5 மற்றும் 43.5 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | தற்போது முதலாவது மாடியின் மற்றும் இரண்டாவது மாடியின் வேலைகள் அனேகமாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், மின்சார தொடர்பு பெற்றுக்கொள்ளல் உட்பட வரையறுக்கப்பட்ட வேலைப் பகுதியொன்று பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் அமைச்சின் பெறுகைக் குழு 2024 மே 07 திகதி பொது நிருவாக அமைச்சுச் செயலாளரின் தலைமையில் கூட்டமொன்று நடாத்தியிருந்ததுடன், அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இந்த கட்டிடத்தின் முலதாவது மற்றும் இரண்டாவது மாடிகளை பயன்படுத்துவதற்காக வேலைகளை பூர்த்தி செய்வதற்காக ஒரு மாதத்தினுள் பூர்த்தி செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது என. | கட்டிடத்தின் நிர்மான வேலைகளை தாமதம் இன்றி பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு நேரொத்திருக்காமை மற்றும் இறந்த இளைப்பாரியவர்களுக்கு ஓய்வூதியம் செலுத்தியிருத்தல் போன்ற பல்வேறு காரணங்களினால் 13 பிரதேச செயலகங்களின் மூலம் 143 ஓய்வுபெற்றோருக்காக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய மிகையாக செலுத்தியிருந்த ஓய்வுதியம், பணிக்கொடை மற்றும் படிகள் ரூபா 17,350,169 தொகை என அவதானிக்கப்பட்டது. அந்தத் தொகையில் ரூபா 15,302,073 தொகை 05 வருடங்களுக்கு குறைவான காலமும், ரூபா 2,001,945 தொகை 05 வருடங்களுக்கும 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமும், ரூபா 46,150 தொகை 10 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மேலும், சீதாவக்க மற்றும் மஹரகம பிரதேச செயலகங்கள் தொடர்பாக மிகையாக செலுத்தப்பட்டு அறவீடு செய்யப்பட்டு வந்த 05 ஓய்வூதியம் பெறுவோர் இறந்திருந்த காரணத்தினால் கூட்டுத்தொகை ரூபா 1,041,700 தொகை அறவீடு செய்தல் மேற்கொள்ள முடியாமல் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. இந்த ரூபா 17,350,169 தொகையில் ஒரு பகுதி அறவிடப்பட்டு வருவதுடன், 10 வருடங்களை மிகைத்துள்ள அறவீடுகளில் ரூபா 46,150 இற்கான தொகை பாதுக்க பிரதேச செயலகத்திற்கு உரியதெனவும், ஓய்வுபெற்றோர் இறந்திருந்ததால் அறவீடுகள் நிறுத்தப்பட்டிருந்தது எனவும், இது தொடர்பாக நி.பி. 104 இன் படி தயாரிக்கப்பட்ட அறிக்கை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என. | மிகையாக செலுத்தியிருந்த ஓய்வூதியத் தொகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டியுடன், முறையான விசாரணை நடாத்தி மிகைக் கொடுப்பனவிற்கு பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஓய்வுபெற்றோர் இறந்துள்ளார் என உறுதிப்படுத்திய சந்தர்ப்பத்திலும் அந்த ஓய்வுபெறுவோரின் ஓய்வூதியம் அவரின் வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் கடுவல மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலகம் தொடர்பாக இறந்துள்ள முறையே 87 ஓய்வுபெற்றவர்கள் மற்றும் 03 பேர் தொடர்பாக மிகையாக செலுத்தியிருந்த தொகை | கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | இறந்துள்ள ஓய்வூதியம் பெறுவோரின் தகவல்கள் கால ரீதியாக நாளதுவரை ஆக்கப்பட வேண்டியதுடன், வங்கியிலிருந்து பணம் பெற்ற தரப்பினரிடம் தாமதம் இன்றி அந்தத் தொகையை அறவீடு செய்ய வேண்டும். |

முறையே ரூபா 5,506,152 தொகை மற்றும் ரூபா 999,256 இற்கான ஓய்வூதியத்தை திருப்ப அறவிட முடியாமல் உள்ளது.

### 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜனாதிபதிச் செயலகச் செலவுத் தலைப்பின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது பிரதேச செயலக மட்டத்தில் செயற்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 124 சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட போதிலும், 2023 திசெம்பர் 31 திகதி அளவில் அவற்றில் 88 சங்கங்கள் செயற்படாதிருந்ததுடன், அத் திகதியில் உள்ளவாறு அந்தச் சங்சங்கள் தொர்பாக கிராம சக்தி தாய் சங்கத்தின் கணக்கில் ரூபா 30,773,717 தொகையும், நுண் நிதிக் கணக்கில் ரூபா 4,291,189 தொகை ஆக வங்கிக் கணக்குகளில் மீதியாக காணப்பட்ட ரூபா 35,064,906 இற்கான தொகை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கிராம சக்தி மக்கள் நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி செயலக செலவுத் தலைப்பின் கீழ் கிராம சக்தி அலுவலகம் ஊடாக செயற்பட்டதாகும். இந்த கிராம சக்திச் சங்கங்கள் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதுடன், கிராம சக்தி அலுவலகங்களினால் அறிவித்தவாறு ஆரம்ப சங்கப் பதிவுக் கட்டணங்கள் மற்றும் கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திச் செல்வதற்காக ஏற்பாடுகள் வழங்கப்பட்ட போதிலும், பின்னர் பதிவினை புதுப்படுத்தல் அல்லது சங்கத்தை நடாத்திச் செல்வதற்காக ஏற்பாடுகள் ஒதுக்குதல் மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பிட்ட கிராம சக்தி தாய்க் கணக்கில் மற்றும் நுண் நிதிக் கணக்குகளில் காணப்பட்ட மீதிகள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுரைகள் கிடைத்திருக்கவில்லை என. | சரியான ஆலோசனைகள் மற்றும் வேலைத் திட்டத்தின் கீழ் பணம் பயன்படுத்தப்பட்டு நிகழ்ச்சித் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும். |

### 3.7 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வூதிய கொடுப்பனவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது இரத்மலான, கடுவலை மற்றும் மஹரகம பிரதேச செயலகங்களினால் முறையே ஓய்வூதிய கோப்புக்கள் 34, 120 மற்றும் 231 காணாமல் | கணக்காய்வு அதவானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என மற்றும் தற்காலிக கோப்புக்கள் தயாரிக்கப்பட்டு ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், மற்றும் ஓய்வூதிய பன்முகப்படுத்திய செய்முறையின் | ஓய்வுதியக் கோப்புக்கள் மற்றும் ஆவனங்கள் பராமரித்தல், பாதுகாத்தல் தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுதத்தப்பட வேண்டிதுடன், காணாமல் போன |

| | | | |
|---|---|---|---|
| | போயிருந்தன. காணாமல் போன கோப்புக்கள் எப்போது காணாமல் போனது அவை எந்த உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்டது. மற்றும் அவை காணாமல் போனதற்கான காரணத்தை கண்டறிந்திருக்கவில்லை. | கீழ் வேறு பிரதேச செயலகங்களிலிருந்து மாற்றப்பட்ட சில ஓய்வூதியம் பெறுவோரின் கோப்புக்கள் இன்றி தரவு முறைமையின் மூலம் மாற்றப்பட்டுள்ளது என. | கோப்புக்கள் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மகரகம பிரதேச செயலகத்திற்குரிய ஓய்வூதியம் பெறுவோரினால் உயிர்வாழும் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே 06, 36 மற்றும் 39 ஆக 81 ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியக் கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. அந்த ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 02 இறந்த ஓய்வூதியம் பெறுவோருக்கு 07 மாதங்கள் வீதமும் ஒரு ஓய்வூதியம் பெறுபவருக்கு 15 மாதங்களும் ஓய்வூதியம் மிகையாக கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உயிர் வாழ்தல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாமையால் ஓய்வூதியம் செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த 81 பேர்களில் தற்போது 35 பேரின் தகவல்கள் கண்டிறியப்பட்டதுடன், 03 இறந்த ஓய்வு பெறுவோர்களில் இரண்டு பேரின் வங்கிக் கணக்குகளில் பணம் காணப்படுவதனால் அந்தப் பணத்தை தருவித்துக்கொள்வதற்கும் பணம் காணப்படாத நபரின் பாதுகாவலரிடம் பணம் செலுத்தும் படி அறிவிக்கப்பட்டது எனவும். | உயிர் வாழ்தல் சான்றிதழ் சமர்ப்பித்திருக்காத ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக தொடர் நடவடிக்கை தாமதம் இன்றி எடுக்கப்பட்டு ஓய்வூதியம் மிகையாக செலுத்தும் சந்தர்ப்பங்களை குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இரத்மலானை பிரதேச செயலகத்தினால் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அங்கீகாரம் இன்றி அரச காணிகளை அனுபவிக்கும் / வசித்து வரும் காணிகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோப்பின் படி 03 நபர்கள் மற்றும் தனியார் நிறுவனம் ஒன்றினால் 0.31 ஹெக்டயர் காணி அளவொன்று அங்கீகாரம் இன்றி வசித்து / அனுபவித்து வருகின்றனர் எனவும் கண்டறியப்பட்ட போதிலும், உரித்தினை பெற்றுக்கொள்வதற்காக பிரதேச செயலாளரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அங்கீகாரம் இன்றி அரச காணிகளில் அனுபவித்து / வசித்து வருகின்ற காணிகள் தொடர்பாக பதிவேடொன்று தற்போது பேணப்பட்டு வருகின்றதெனவும், உரித்தினைப் பெற்றுக்கொள்வதற்காக வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதெனவும். | அங்கீகாரம் இன்றி அரச காணிகளை அனுபவிக்கும் நபர்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்து அந்தக் காணிகளின் உரித்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளப்பட்டதென 2023 ஆண்டு வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளும் செயலாற்றுகையின் கீழ் 32 பிரிவுகள் தொடர்பாக 12 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் 187 சுட்டிகளின் முன்னேற்றம் காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றில் 18 சுட்டிகளின் முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த பெறுமதியும் 34 சுட்டிகளின் முன்னேற்றம் 50 சதவீதத்தில் இருந்து 74 சதவீதம் இடைப்பட்ட பெறுமதியொன்று காணப்பட்டது. | மின்சார முறைமை திருத்த வேலை தொடர்பாக 03 பிரதேச செயலகங்களில் கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை, உரிய ஏற்பாடுகள் காணப்படாமை, வங்கி வட்டி வீதம் அதிகரித்திருந்தமையால் தொழில் முயற்சியாளர்கள் முதலீடுகளுக்காக முன்வந்திருக்காமை. காணி பயன்படுத்துவதற்காக பிரிவிற்குரிய செயற்திட்டங்கள் நாளதுவரை ஆக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாக காணப்பட்டமையால் அது 2024 ஆண்டிலும் நிறைவேற்றப்படவுள்ளது என. | நிலைபேறான அபிவிருத்திக்காக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பாக 42 கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அது கணக்காய்வுத் திட்டத்தின் படி எதிர்பார்த்த எண்ணிக்கையில் 50 சதவீதமாக மாத்திரம் இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படகின்றது என. 2024 ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் படி செயலாற்றலை அடைந்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி என உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | கணக்காய்வுத் திட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

**6. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த ஊழியர் எண்ணிக்கை 1,423 தொகையும், உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 1,511 தொகையுமாக காணப்பட்டது. அத் திகதியில் உள்ளவாறு வெற்றிடப் பதவியணி 271 தொகை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் 359 மிகையொன்று காணப்பட்டது. வெற்றிட ஊழியர் எண்ணிக்கையில் பொது மக்களுக்கு நேரடியாக சேவைகள் வழங்கும் கிராம உத்தியோகத்தர் பதவிகளின் வெற்றிடங்கள் 121 காணப்பட்டது. | தொழிலற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்குவதற்கு அனுப்பப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர சேவையில் நியமனம் செய்தல் தொடர்பாக பொது நிருவாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுரைகளின் படி இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகை ஏற்பட்டிருந்தது என.<br>வெற்றிட கிராம உத்தியோகத்தர் பதவிகளுக்கான பிரிவுகளுக்கான பதில் கடமை நியமனம் மேற்கொண்டிருந்ததுடன், ஏனைய வெற்றிடங்கள் தொடர்பாக கடமை நிறைவேற்றல் அல்லது பதில் கடமை நியமனம் வழங்குதல். | முறையான ஆய்வொன்று மேற்கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்ததுவதற்கு அல்லது / மற்றும் அவ்வாறன்றேல் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 08 பிரதேச செயலகங்களில் 1997 முதல் 2023 வரையான காலப் பகுதியில் பல்வேறு காரணங்களினால் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த 16 உத்தியோகத்தர்கள் காணப்பட்டதுடன், அவர்களில் 09 பேர் வேலை இடைநிறுத்தப்பட்டு 10 வருடங்களை மீகையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணைகள் முடிவடைந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களில் சிலர் 10 வருடத்தை விட மிகையான காலம் முதல் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன், மற்றும் அவர்கள் தொடர்பான விசாரணைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக விசாரணைகளை முடிவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றக் கொள்கைகளின் படி ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களை விட மிகையான காலம் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இடமாற்றப்படுவார்கள் என | வருடாந்த இடமாற்ற தகவல்கள் தொடர்பாக 05 வருடங்களுக்கு மிகையான அனைத்து உத்தியோகத்தர்களின் பட்டியலொன்று பதவிகளின் படி வெவ்வேறாக தயாரிக்கப்பட்டு இணைந்த சேவைப் பணிப்பாளருக்கு | வருடாந்த இடமாற்றலின் கீழ் காணப்படும் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவலகள் உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்த போதிலும் 2023 ஜூலை முதல் 2023 செப்தம்பர் மாதம் அளவில் கெஸ்பேவா மற்றும் கடுவல பிரதேச செயலகங்களில் சேவைக் காலம் 05 பேர் வருடங்களை மிகைத்திருந்த உத்தியோகத்தர்கள் முறையே 96 மற்றும் 50 காணப்பட்டது. அவற்றில் முறையே 08 உத்தியோகத்தர்கள் மற்றும் 44 பேர்கள் 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் அந்த அலுவலங்களில் கடமையாற்றி வருகின்றனர் என அவதானிக்கப்பட்டுள்ளது. | அனுப்பப்பட்டுள்ளது என. | |
| (ஈ) | 2019 செப்தம்பர் 04 திகதி முதல் சம்பளமின்றிய வெளிநாட்டு விடுமுறை அங்கீகரித்துக்கொண்டிருந்த கெஸ்பேவ பிரதேசத்திற்கு இணைக்கப்பட்டுள்ள பெண் அபிவிருத்தி உத்தயோகத்தர் ஒருவர் 2022 செப்தம்பர் 04 திகதி மீண்டும் கடமைக்கு வர வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அதன்படி, சேவையை விட்டுச் செல்லல் அறிவித்தல் ஒன்று அவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், தாபனக் கோவையின் XII – 16:5 பிரிவின் 10 ஆவது பின்இணைப்புக்கு இணங்க 2019 ஆகஸ்ட் 20 திகதி அந்த பெண் உத்தியோகத்தருடன் கையொப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கையின் IV பிரிவிற்கு இணங்க மீண்டும் சேவைக்கு வராமையினால் அரசுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 675,136 இற்கான தண்டத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. | இந்தத் தண்டத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | தானபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(உ) 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| i. | சுற்றறிக்கையின் பிரிவு 6.4 இன் படி மாவட்ட செயலகத்தினால் நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கும் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் டிப்லோமா பாடநெறி / பட்டப் பின்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக கண்டறிந்திருக்காத போதிலும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு டிப்லோமா பாடநெறி மற்றும் பட்டப் பின்படிப்பு பாடநெறி கற்பதற்காக பதவியணி பயிற்சிச் செலவின் கீழ் ரூபா 564,000 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது. | 2024 ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு கவனம் செலுத்தி மேற்கொள்ளப்படும் என மாவட்ட உத்தியோகத்தர் பயிற்சி வழங்கும் விருப்புடன் வளவாளர்களை உருவாக்கும் நோக்கத்துடன், இந்த மூன்று உத்தியோகத்தர்களும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் டிப்லோமா பாடநெறியொன்றிற்காக அனுப்பப்பட்டதெனவும் மற்றும் சேவை யாப்பின் படி மேற்கொள்ள வேண்டிய பட்டப் பின்படிப்பு பாடநெறி ஒன்றாகும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் போது ஒவ்வொரு ஊழியர் / உத்தியோகத்தரினால் காட்டப்பட்டுள்ள பயற்சித் தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், அதற்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கக் கூடாது. |
| ii. | சுற்றறிக்கையின் பிரிவு 6.1 இன் படி மனிதவள அபிவிருத்தி செய்தல் தொடர்பாக பதவியணியில் அனைத்து அங்கத்தவர்களுக்குமாக ஒரு வருடத்திற்கு குறைந்த அளவு 12 மணித்தியாளங்களுக்கு குறையாத பயிற்சி சந்தர்ப்பம் ஒன்று வழங்குவதை உறுதிப்படுத்தக் கூடியவாறு மாவட்ட செயலகத்தின் பயிற்சித் திட்டம் தயாரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டு தொடர்பாக மனிதவள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது எனவும், அந்த திட்டத்தின் படி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றது எனவும் மற்றும் முன்னேற்றம் காலாண்டு அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி பயிற்சித் தேவைப்பாட்டுத் திட்டம் தயாரித்தல் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |